# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


**எழுத்தாளர் கவனத்திற்கு!**

காவலின் கிறிஸ்மஸ் மலருக்கான கவிதைகள், கதைகள், கட்டுரைகளை வரவேற்கிறோம். அனுப்புவோர் இம்மாதம் 15-ம் தேதிக்கு முன்பதாக எமது அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர்


94-ம் புத். | 1969-ம் ஆண்டு மார்கழி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 48-ம் இல.


# திருப்பலியின் புதிய முறையையிட்டு

## பரி. தந்தையின் விளக்கம்

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் சென்றவாரம் அளித்த பொதுப்பேட்டியில் திருப்பலி இப்போது ஒப்புக்கொடுக்கப்படும் புதிய முறையைப்பற்றிக் குறிப்பிட்டார். திருத்தி அமைக்கப்பட்ட முறையில் இப்போது ஒப்புக்கொடுக்கப்பட்டுவரும் திருப்பலி ஒரு புதிய திருப்பலியல்ல, யேசுக்கிறிஸ்துநாதர் காலந் தொடக்கம் ஒப்புக்கொடுக்கப்பட்டுவரும் அதே திருப்பலியின் புதிய சகாப்தம் என விளக்கினார். இப் புதிய முறை 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளின்படி அநேக வருடகாலமாக திருச்சடங்கு நிபுணர்கள் செய்துவந்த ஆராய்ச்சியின் பயனாகத் தயாரிக்கப்பட்ட முறையாகுமெனவும் இன்று ஒப்புக்கொடுக்கப்பட்டுவரும் பலிக்கும், யேசுநாதர் திருச்சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலிக்கும் வித்தியாசம் இல்லையெனவும், திருப்பலியின்போது ஒப்புக்கொடுக்கப்படுகிற அப்பமும் இரசமும் யேசுநாதர் தமது இறுதிப் போசனத்தின்போது தமது சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றிய அதே முறையில் எமது ஆண்டவரின் திருச்சரீரமாகவும் இரத்தமாகவும் இருப்பதையும் சிறப்பாக விளக்கியருளினார்.

## காணாமற்போன குருவானவரின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டது

தென் வியட்னாமில் ஹனோய் நகருக்கு அருகாமையில் உள்ள ஒரு வீசாரணைப்பங்கில் கடமையாற்றிவந்த 52 வயது நிறைந்த வியட்னாமிய தேசக் குருவானவர் ஜோண் பன்டொங் என்பவர் திடீரெனச் சென்ற வருடம் ஆடி மாதத்தில் காணாமற்போனார். அவரை வியற்கொங் குழுவினர் கைப்பற்றிக்கொண்டதாக மக்கள் எண்ணிவந்தனர். இது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவரது சடலம் கூட்டமாகப் புதைக்கப்பட்ட பலருடன் அண்மையில் கண்டெடுக்கப்பட்டது.

## திருமதி ரேஸ் கெனடிக்கு பரிசுத்த தந்தை அனுப்பிய கடிதம்

சென்ற மாதம், உலகப் பிரசித்திபெற்ற அமெரிக்க கத்தோலிக்கர் திரு. ஜோசவ் கெனடி தனது 82-ம் வயதில் காலமானார். திரு. ஜோசவ் கெனடி கீர்த்தி வாய்ந்த ஓர் அமெரிக்க பிரஜை மாத்திரமல்ல, ஒரு சிறந்த கத்தோலிக்கருமாய் விளங்கியவர். இவரது மரணத்தினால் துக்கத்தில் அமிழ்ந்திருக்கும் அவரது மனைவியார் திருமதி ரேஸ் கெனடிக்குப் பரிசுத்த தந்தை அண்மையில் கடிதம் அனுப்பி அவருக்கும், அவரது குடும்பத்தார் அனைவருக்கும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார். முன்போல கெனடி குடும்பம் உத்தம கத்தோலிக்கராக விளங்கிவரத் தேவனை இரந்து கேட்பதாக அக் கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வத்திக்கான் செய்தி ஸ்தாபனம்

வத்திக்கானிலுள்ள செய்திஸ்தாபனத்தின் உதவியை நாடும் தேசங்களுக்குரிய பத்திரிகையாளருக்கு வத்திக்கான் அதிகாரிகள் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். அது என்னவெனில் அவர்கள் பெறும் செய்திகளைக் கத்தோலிக்க திருச்சபைக்குப் பாதகமாகவோ, உண்மைக்கு மாறாகவோ திரித்துப் பிரசுரிப்பார்களானால், அவர்களுக்கு உரிமைகள் எவையும் அதன்பின் வழங்கப்படமாட்டா என்பதே. உலகதேச தலைநகர்கள் எவற்றிலும் பார்க்கத் திறமையான முறையில் வத்திக்கான் உலகின் பலகோணங்களிலுமிருந்து செய்திகளைப் பெறக்கூடியதாயிருப்பதால் உலக புதினங்களை நாடும் பத்திரிகையாளர்கள் வத்திக்கான் செய்திஸ்தாபனத்துக்குப் பெரும்மதிப்பு அளித்து வருகின்றனர் என்பது வெளிப்படை.

## திருவருகைக்கால கூட்டுப் பிரார்த்தனை

இம்மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றங்களுக்கு அருகாமையிலுள்ள பரிசுத்த பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை, இலங்கைத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, இரட்சணிய சேனை ஆகிய பல்வேறு கிறிஸ்தவ சபையினரடங்கிய பெருந்திரளான விசுவாசிகள் ஒன்றுகூடி கிறிஸ்துநாதரின் திருவருகைக்கால கூட்டுப் பிரார்த்தனை ஒன்று சிறப்பாக நடத்தினார்கள். அவ்வமயம் திவ்விய கீதங்களும், பரிசுத்த ஆகமங்களிலிருந்து வாசனைகளும், செபங்களும், உபந்நியாசங்களும் இடம்பெற்றன. தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகர் அருட்திரு சபாபதி குலேந்திரன் அவர்களும் மற்றைய சபைகளுக்குச் சேர்ந்த குருமார் பொதுநிலையினரும், கத். திருச்சபையைச்சேர்ந்த துணை ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகை, வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேல், அரசாங்க அதிபர் எவ். சீ. பீற்றர்சும் பிரார்த்தனையில் விசேஷபங்கு எடுத்துக்கொண்டனர். கோவில் உள்ளும் புறமும் பிரார்த்தனையில் பங்குபற்றுவோரால் நிறைந்திருக்க கூட்டுப் பிரார்த்தனை மிக அருட்சிக்குரிய விதமாக நடந்தேறியது.

## உலக வறுமைப்பிணியகற்ற வழிவகைகள்

உலக வறுமைப் பிணியகற்ற ஒவ்வொரு முன்தங்கிய தேசமும் தனது வருவாயில் ஒருசதவீதம் கொடுத்து உதவ முன்வரவேண்டுமென சிலவருடங்களுக்குமுன் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பபாப்பரசர் ஐக்கியநாடுகளின் சபையில் செய்த சொற்பொழிவில் கேட்டுக்கொண்டாரல்லவா? அவர் அன்று விதைத்த விதை இன்று முளைக்கத் தொடங்கியிருக்கின்றது. இங்கிலாந்துஉட்பட பலதேச அரசாங்கங்களும் தம்மாலான உதவிகளை ஏற்கனவே செய்கின்றன. இதற்கென ஒருவிசேஷ நிதிதிரட்ட முயற்சிகள் எடுபட்டுவருகின்றன. இங்கிலாந்தில் மக்களின் ஆதரவை இதுவிஷயமாய் அரசாங்கத்துக்குத் தெரிவிக்க பலகிறிஸ்தவசபைகளும் ஒன்றித்து முயற்சி செய்கின்றன; சென்றவாரம் ஆங்கிலநாட்டு கருதினால் ஹீனன் அடிகளாரும் அந்நாட்டு மேற்றிராணிமாரும், அத்தேசத்தின் கத்தோலிக்க ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் ஆதரவாளரின் கையொப்பங்கள் வாங்க ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். சுமார் 40 கோடிமக்களின் கையொப்பங்கள் திரட்ட அந்நாட்டில் முயற்சிகள் நடக்கின்றன.

## நிபந்தனைகள் வேண்டாம்

"முன்தங்கியநாடுகள் வறிய நாடுகளுக்கு அளித்துவரும் பலவகை உதவிகளும், பலவகைப்பட்ட நிபந்தனைகளுடன் அளிக்கப்படுவதால், அக்கொடைகள் பின்தங்கிய நாடுகளின் சுதந்தரத்துக்குத் தடைவிதிப்பதாயிருக்கின்றன" என்று கானாதேச அதிமேற்றிராணியார் அமிசாஅடிகளார் சுட்டிக்காட்டியிருக்கிறார். முன்தங்கிய நாடுகளின் முறையைப்பின்பற்றாது கத்தோலிக்க தர்மஸ்தாபனங்கள் பணஉதவியையோ, பொருள் உதவியையோ செய்யும்போது நிபந்தனைகளின்றிச் செய்யுமாறு அவர் விண்ணப்பித்திருக்கிறார்.

## அனைத்துலக ஆயர்கள் பேரவையின் சாதனைகள்

**பிரெஞ்சு கருதினால் கருத்துகள்**

பாரீஸ் பேராசிரியர் கர்தினால் மாட்டி அண்மையில் அளித்த இரு பத்திரிகைப் பேட்டிகளில் உரோமையில் நடந்த அனைத்துலக ஆயர்கள் பேரவையின் சாதனைகளைக் குறிப்பிட்டார்.

பேரவைத் தந்தையர் அனைவரும் ஒருமனதாக, பாப்புவின் தலைமை அதிகாரத்தையும், ஆயர்களின் கூட்டுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்கள். பாப்புவின் உச்ச அதிகாரம், ஆயர்களின் கூட்டுப் பொறுப்பு ஆகிய இரண்டும் திருச்சபையின் மேய்ப்புப் பணிக்கு இன்றியமையாதவை. இவ்விரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு பொருந்தியிருக்கவேண்டும். அரசாட்சி முறையை விட்டுத் திருச்சபை ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுள்ளது என்பது இதற்குப் பொருளன்று.

பல்வேறு நாடுகளிலுள்ள திருச்சபைகள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு உரையாடல் நிகழ்த்த பேரவை வாய்ப்பு அளித்தது என்றார் கருதினால் மார்ட்டி. மேல்நாட்டுத் திருச்சபை ஆபிரிக்க சபையுடன் தொடர்புகொண்டது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். "எங்கள் பிரச்சினை மாறுபட்டிருந்தாலும் எங்கள் பணி ஒன்றேதான். நாம் அனைவரும் மிகுந்த விழிப்புடன் மேற்கொள்ளவேண்டிய ஆபத்து ஒன்று உண்டு—அதுவே

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையிலே இனிமை

(வரதராஜ் இராசையா, கண்டி)

அரசாங்கத்தின் சலுகை பெற்று மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்லவிருந்தான் செல்வம். பிறந்தநாட்தொட்டு இன்றுவரை அவன் தன் தாயை விட்டுப் பிரிந்திருந்ததே கிடையாது. அவனுக்கு 22 வயது பூர்த்தியாகி இருந்தது. ஆனால், தாய்க்கோ செல்வம் இன்றும் 5வயதுக் குழந்தைதான். "பாவம் குழந்தை; இனிமேல் யார் அவனுக்கு இதமாக ஆக்கிக் கொடுக்கப் போகிறார்கள். அவனுக்குக் கண்டதும் கடியதும் ஆகாது. அவனுடைய சுகத்தைப்பற்றிக் கவனிக்க யார் அங்கே இருக்கிறார்கள். அவனோ தன்னுடைய சுகத்தில் சற்றேனும் அக்கறையற்றவன்" இப்படியாக வேதனைப்பட்டது பெற்றமனம். பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லுஎன்பார்களே. செல்வத்திற்கோ ஆனந்தம்; வெளிநாடுபோவது புது அனுபவம் அல்லவா? இளங்கன்று பயம்அறியாது. ஆனால் இருவரும் பிரியும்நேரம் வந்ததும செல்வத்தை அறியாமலே பயப்பிராந்தி அவனை ஆட்கொண்டது. வாழ்க்கையில் முதற்தடவையாகத் தனிமையை அனுபவிக்கப் போகிறான். தாய் பக்கத்தில் இருக்கிறாளே என்ற தெம்பு அவனுக்கு இனிமேல் இராது. பிரிவின்போது இருவரும் அழுதே விட்டார்கள்.

தனிமைஎன்பது ஒரு பயங்கரமானது. அதை மானிடன் ஒவ்வொருவனும் என்றாவது சுவைத்தே தீரவேண்டும். புனித சின்னப்பர் மனம் மாறுவதற்குமுன் தனிமையை நன்கு உணர்ந்து அதை அனுபவித்தே இருக்கவேண்டும். ஆனால் அவர் கொன்றுகுவித்த கிறீஸ்தவர்கள்; தனிமையால் வாட்டி வதைக்கப்பட வேண்டிய மரணவேளையிலும், யாரோ தங்களோடு இருக்குமாப்போன்ற உணர்வுடன் ஆனந்தமாய் ஆடிப்பாடி மரித்தனர். இது அவருக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்தது. கிறீஸ்தவர்களைச் சிறைப்படுத்த டமஸ்கு பட்டணத்துக்கு விரைந்து கொண்டிருந்த பொழுதும்கூட அவர்மனம் அப்புதிரைப் புரிய விரைந்துகொண்டிருந்தது. நடுவீதியிலே எதேர்ச்சையாக அப்புதிர் வெளித்தது. அவர் வாதைப்படுத்திய கிறீஸ்து அவரை ஆட்கொண்டார். இனிமேல் தனிமை அவருக்குக் கிடையாது. இல்லை, தனிமையிலே இனிமை காண முடிந்தது. தனக்குவமையில்லாத் தலைவனாகிய கிறீஸ்து விண்ணுலகத்தில் உள்ளான் என்று சொல்லுவார் சொல்லுக. பொன்னுலகத்தில் உள்ளான் என்று சொல்லுவார் சொல்லுக. பொன்னுலகத்தில் உள்ளான் என்று பேசுவார் பேசுக. அவன் என் உள்ளத்தில் உள்ளான் என்றுரைப்பேன் யான். கிறீஸ்து அவரில் வாழும்போது தனிமை இனிமையாகத்தானே இருக்கும். கலேசியருக்கு அவர் எழுதிய கடிதத்தில், "நான் வாழ்கிறேன்; நானல்ல என்னில் கிறீஸ்து வாழ்கிறார் என்று தம் அனுபவத்தை அழகாக வர்ணித்தார்.

தாயும்சேயும் ஒன்றாக இருக்க விரும்பியது ஒருவர்க்கொருவர் துணையாக இருப்பதற்கு மட்டுமல்ல, அது அன்பின் சின்னமும் கூட. அன்பு செய்யும்இருவர் ஒன்றாகஇருப்பதற்கு விரும்புவது இயற்கையே. அப்படியாயின் தாயினும் மிக்க அன்புடன் எம்மை நேசிக்கும் கிறீஸ்து, எம்மேல் வைத்த அன்பிற்காகத் தம்உயிரையே பணயம்வைத்த கிறீஸ்து, எம்மில் வாழ்ந்திட விரும்புகிறார்; இல்லை, வாழ்கிறார் என்றால் ஆச்சரியம் என்ன? எனவே ஞானஸ்நானம் பெற்ற நாட்தொட்டு ஒவ்வொரு கிறீஸ்தவனும் "நான் வாழ்கிறேன்; நானல்ல என்னில் கிறீஸ்துவே வாழ்கின்றார்" என்று புனித சின்னப்பருடன் சொல்லலாம். கிறீஸ்தவன் என்பதற்குக் கிறீஸ்து அவன் என்றல்லவா பொருள். அப்படி என்றால் ஒவ்வொரு கிறீஸ்தவனும் தனிமையிலே இனிமை காணவேண்டும்.

அப்போஸ்தலர் சின்னப்பரைக் கிறீஸ்துநாதர் ஆட்கொண்ட நாட்தொட்டு தாம் பெற்ற செல்வத்தைவையகமே பெறவேண்டும் என்று துடியாய்த் துடித்தார். அத்திரவியத்தைப் பகிர்ந்துகொள்ளத் திரைகடலோடினார். அதனால் அவருக்கு நேர்ந்த விபத்துக்கள், விபரீதங்கள், சிறைவாசங்கள், அடிஉதைகள், மானக்கேடுகள் எத்தனை! எத்தனை!! இத்தனையையும் அவர் தனிமையில் அனுபவித்தாரா? இவை அத்தனையிலும் கிறீஸ்து தம்மோடு இருக்கிறார் என்ற பிரமை அவருக்கு.

அதே கிறீஸ்துவைத் துணைகொண்டுவாழும் நாம் நடந்துகொள்ளும் விதம் எது? கிறீஸ்தவர்களாக வாழ்ந்தால் எம் தொழில் துறைகளில் துன்ப துரிதங்கள் ஏற்படும் என்று அஞ்சிஒடுங்கும் கோழைகளல்லவா நாம்? நேர்மை, நீதி நியாயம், கடமை, காருண்ணியம் என்றுவாழ்ந்தால் வாழத்தெரியாதவன்என்றும், பெரிய பரிசுத்தவான் என்றும், பரிகசித்து எம்மை ஒதுக்கிவிடுவார்கள். அங்கே நாம் தனித்து நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமேஎன்று பயந்து அஞ்சிக் கூட்டத்தோடு கோவிந்தா போட்டுக்கொண்டு ஊர் ஓடுகிறது ஒத்தோடுகிறேன் என்று நேர்மை அற்று, நெறிதப்பி, கடமை உணர்ச்சியற்று வாழ்கிறோமே. எந்தத் துன்பத்திலும், சோதனையிலும் நாம் தனித்து நிற்பதில்லை. எம்மில் கிறீஸ்து வாழ்கிறார் என்பதை மறந்துவிடுகிறோம்.

ஒருதாய் தன்மகவுடன் வாழ்வதால் அவர்கள் தனிமையை மறக்கலாம். துன்பத்தில் இருவரும் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அழுதழுதும் பிள்ளை அவளேபெறவேண்டும். அவரவர் துன்பத்தை அவரவரே சுமக்கவேண்டும். ஆனால் கிறீஸ்தவன் துன்பப்படும் பொழுது அவனில் கிறீஸ்து வாழ்கிறார் என்ற தெம்பு அவனுக்கு இருக்கும். எனவே துன்பத்தின் சுமை இனிமையாய் இருக்கும்.

மகனுக்குத் தாய் இருக்கிறாளே என்றதெம்பு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும். அவனை அன்புசெய்யும் எவர்தானும் எங்கும் என்றும் இருப்பார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும். இதை நினைவில் நிறுத்தியே:

"வீடுவரை உறவு, வீதிவரை மனைவி,
காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ?"

என்று ஏங்குகிறார் ஒரு கவிஞர். இந்த ஏக்கம் கிறீஸ்தவனுக்கு இருக்கமுடியாது.

# இரட்சணிய சரித்திரம்

## பழைய ஏற்பாடு

தமிழாக்கம்: சிஸ்ரர் அன்ரனி யோசவ்

(முன் தொடர்ச்சி)

### 2. தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்புகின்றார்:

மேற்கூறப்பட்டபிளவு இருந்தபோதிலும் தேவன் இஸ்ராயேலருக்கும், யூதாவுக்கும் தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களுடைய ஞானவாழ்வைப் புதுப்பித்துக்கொண்டுவந்தார். தேவனுடைய பிரதிநிதியாய் இருந்து அவரிடமாகக் கதைப்பவனே ஒரு தீர்க்கதரிசியாவான். இவர்களுக்கு ஒரு விசேஷ தொண்டு இருந்தது. தேவனுடன் தமதுமூதாதைகள் செய்த உடன்படிக்கையில் இருந்து மக்கள் விலகிப்போகும் பொழுது அவர்களை அச்சமின்றிக் கண்டித்து மெய்யான தேவன்பால் அவர்களைத் திருப்புவதே இவர்களின் முக்கியவேலையாய் இருந்தது. உடன்படிக்கைக்கு விசேஷ ஆபத்து வந்தபோது இவர்கள் அடிக்கடி தோன்றினார்கள். தமது தொண்டின் ஆரம்பகாலத்தில் இவர்கள்ஒரு ஞான அனுபவத்திற்குள்ளானார்கள். கடவுளுடைய கண்களைக்கொண்டு உலகத்தை நோக்கினர். ஆட்களும் சம்பவங்களும் மனித இரட்சணியத்தின் தெய்வீக திட்டத்தில் செயலாற்றுவதாகக் கண்டார்கள். இவ் ஞானநோக்கினால் இவர்கள் நாட்டின் சம்பவங்களில் பலவாறு கலந்துகொண்டனர். தங்களுக்கு ஏற்படும் சம்பவங்களை மக்கள் தேவனுடைய நோக்கைக் கொண்டு பார்க்கச் செய்வதே இவர்களின் தொண்டாகும்.

### 3. இஸ்ராயேல் இராட்சியம் கி. மு. 931—721

**1-ம் ஜெரோபோவாம் கி. மு. 931—910**

ஜெரோபோவாமை விட்டுப் பிரிந்த பத்துக் கோத்திரங்களும் ஜெரோபோவாம் என்பவரைத் தம் தலைவராக நியமித்துத் தலைநகரை சிச்சேமில் ஸ்தாபித்தான். ஜெருசலேமுக்குத் தன் மக்கள்சென்று தேவனை வழிபடாது தடுக்கத் தனது இராச்சியத்துக்குள் டாங், பெத்தல் ஆகியஇடங்களில் இரண்டு ஆலயங்களைக் கட்டினான். அஞ்ஞான ஆராதனைகளில் இருந்த சில முறைகளை இவன் கண்டுபாவித்தான். உதாரணமாக, பொன்னால் செய்யப்பட்ட கன்றுக்குட்டிகளை ஆலயத்துள் நிறுவினான். இவ் விக்கிரக ஆராதனைக்காகத் தேவன் இவரைத் தண்டித்தார். (3-ம் அரசர் ஆகமம் 14: 7—10) கி. மு. 721-ல் சீரிய படை எடுப்பினால் சமேரியா வீழ்ச்சியுற்றபோது தேவனுடைய தண்டனை நிறைவேறியது. கி. மு. 910—885 நாலு அரசர்கள் இஸ்ராயேலை ஆண்டனர். இவர்கள் ஒன்றில் தற்கொலை புரிந்தனர், அன்றேல் கொலைசெய்யப் பட்டனர். கி. மு. 885—874வரை 'ஓம்றி' இஸ்ராயேலுக்கு ஒரு நிரந்தர அரசாங்கத்தை நிறுவினான். கடந்த 50ஆண்டுகளாக இஸ்ராயேல் தனது அயல் நாடுகளான டமஸ்கஸ், அசிரியா ஆகியவற்றோடு போர்புரிந்து சீர்குலையும் நிலையில் இருந்தது. இவ் அரசன் சமாதானத்தை நிறுவி அரச அதிகாரம் மூன்று பரம்பரைவரை நிலைக்க வழிகோலினான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ராயேல் பலமும் ஒற்றுமையும் நிலைகொள்ளச் செய்தான். இவன் யூதாவோடு ஒற்றுமையாய் வாழ்ந்தான். அஞ்ஞான நாடுகளான தீர், பீனிசியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டான். இவனே அழகிய தலைநகரான சமேரியாவைக் கட்டி எழுப்பினான். தனது இராச்சியத்தைப் பலப்படுத்தும் நோக்கமாக 'ஓம்றி' தன்னுடைய மகன் ஆக்காபை அஞ்ஞான, தீர்நாட்டு இளவரசியான ஜெசபெல் என்பவளுக்கு விவாகம் பண்ணி வைத்தான். இப் பந்தனமானது உடன்படிக்கைக்கு விரோதமாகும். இதன் விளைவாகப் பெருஞ்சீர்கேடுகள் ஏற்பட்டன. ஜெசபெல் தனது அஞ்ஞான தெய்வங்களின் வணக்கத்தை இஸ்ராயேலுக்குள் புகுத்தினாள். இவர்களுக்குப் பிறந்த அத்தாலியா என்பவள் யூதாவின் அரசன் 'யொராம்' என்பவனுக்கு விவாகம் செய்யப்பட்டாள். இவ்விதமான அஞ்ஞானப்பழக்கங்கள் யூதேயாவுக்குள்ளும் பரவின.

**ஆக்காப் கி.மு. 874—853**

இவன் ஓம்றியிலும் பார்க்க, கொடுங்கோன்மை மிக்கவன். இவனது மனைவி இவன்மீது செல்வாக்குச் செலுத்தினாள். இவள் 'அஸ்ராட்டே' என்னும் தேவதைக்குப் பணிசெய்யும் ஒருகுருவின் மகள். இவள் தனது பொய்த் தெய்வங்களுக்கு அநேக பீடங்களைக் கட்டி தன்னுடைய குருக்களுக்குச் சலுகைகளைக் கொடுத்து மெய்யான தேவனை வணங்கும் மக்களைத் துன்புறுத்தி அவர்களுக்கு மரணதண்டனை இட்டாள். இந்நேரத்தில் தேவன் **எலியாஸ், எலிசியஸ்** என்னும் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். இக்காலத்தில் மெய்யான தேவனைவணங்கும் அநேகருக்கு ஓர் ஆபத்தான காலமாக இருந்தது. மெய்யான தேவ வழிபாட்டோடு பொய்த்தேவ வழிபாடு கலப்புறத் தொடங்கிற்று. ஆயினும் தேவன் இவர்களைக் கைவிடவில்லை. இவர் தீர்க்கதரிசிகளை இஸ்ராயேலருக்குத் தமது உடன்படிக்கையை நினைவூட்டி அவர்களை எச்சரித்தும் இஸ்ராயேலருக்கு வாவிருக்கும் ஒரு புதிய அரசனையும் அவ் அரசனது இராச்சியத்தையும் பற்றி முன் அறிவித்தார். எலியாஸ் தீர்க்கதரிசிகளுள் முதல்வர். இவர் வட இராச்சியத்தில்தோன்றி அஞ்ஞான தெய்வமான 'பாலின்' வணக்கத்தை எதிர்த்தார். மோயீசன் உண்மையான தேவனின் வல்லபத்தைப் புதுமைகளினாலும் அறிவுரைகளினாலும் எவ்வாறுகாண்பித்தாரோ அவ்வாறே மெய்யான தேவனின் வணக்கத்தை எலியாசும் புதுமைகளினால் நிரூபித்தார். பயமின்றி இஸ்ராயேலர்உடன்படிக்கையை மீறினதாகக் குற்றஞ்சாட்டினார். மெய்யான தேவனின் நாமத்தினால் தான் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று நிரூபிக்கப் பல புதுமைகளைச் செய்தார். இவ்விதம் ஒருமுறை வானத்தில் இருந்து நெருப்புவிழச் செய்து அதுபலிபீடத்தை எரிக்கும்படி செய்தார். (3-ம் அரசர் ஆகமம் 18, 21, 24, 18, 27—29, 18, 36—39, 19, 15—18)

எலியாஸ் மெய்யான தேவனின் வல்லபத்தைக் காண்பித்தபொழுதிலும் ஜெசபெல் அவரைக் கொல்லத் தேடினமையால் இவர் நாட்டைவிட்டு ஓடவேண்டி இருந்தது. இவர் கொறேப்மலைக்கு ஓடியபொழுது தேவன் அவரோடு பேசி அவரை மீண்டும இஸ்ராயேலுக்கு அனுப்பினார். (3-ம் அரசர் ஆகமம் 19: 15—18) இவர் மீண்டும் புதிய உற்சாகத்துடன் ஜெசபெல் என்பவளையும் "பால்" தெய்வத்தின் குருப்பிரசாதிகளையும் எதிர்க்க மீண்டும் இஸ்ராலேலுக்குச் சென்றார். இஸ்ராயேலர் ஒரு சிறுபான்மையினர் என்கிலும் தேவகோபத்திற்குத் தப்பி அவருக்குப் பிரமாணிக்கமாய்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## சந்தாதாரருக்கு ஒரு வேண்டுகோள்

காவலன் சந்தாதாரருக்கு 1969ஆம் ஆண்டு முடிகிற வரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னமுமே கவனியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப் பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படி இறுதி வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்: 1970ஆம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த 31-1-70-க்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம். பணம் அனுப்பும்போது தங்கள்சந்தா இலக்கத்தையும் குறித்து அனுப்பவும்.

நிர்வாக ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காருண்யம்

## இந்த சனங்களுடன் நான் மிகவும் இரக்கமாயிருக்கிறேன்

### ஆசிரியருரை:

அன்புடை நேயர்களே!....

"கிறிஸ்து ஜயந்தி" என்னும் கர்த்தர் பிறப்புக்காலமானது மகிழ்ச்சிக்குரியதும், நல்வாழ்த்துதல்கட்குரியதும், நன்றியறிதலுக்குரியதுமானதோர் காலமாகும். எனவே, உங்கள் அனைவோருக்கும் நத்தால் சோபன வாழ்த்துக்களையும், ஆசிகளையும், எனது இதயபூர்வமான நன்றியறிதல்களையும் ஈண்டு எடுத்துக் கூறுகின்றேன். இவ் வாழ்த்துதல்களையும், நன்றியறிதல்களையும் உங்கள் அன்பினாலும் தியாகத்திலெழுந்த காணிக்கைகளினாலும் நன்மையடைந்துள்ள அளவிறந்த மக்கள்பேராலும், உங்கள்நிமித்தமாகச் சிறிது ஆதரவையெனினும் அடைந்துகொண்ட எதுவுமற்றவர்கள் பேராலும், எமது ஆண்டவரின் நற்செய்தியை இதுகாலவரை கேட்டறியாதவர்களாய் வாழ்ந்து, உங்களது ஜெபத்தினாலும், தியாகம் நிறைந்த உதாரகுணத்தினாலும் இப்போது அதனை அறிந்துகொண்டவர்கள் பேராலும், உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றேன். "கிறிஸ்து ஜயந்தி" இரவினிலே பாலன் பிறப்புக் குடிலருகே முழந்தாட்படியிட்டு ஆசியிரந்து நிற்கும்வேளையிலே யான் உங்களனைவோரையும் நினைவுகூர்ந்து உங்கட்காக பாலகயேசுவிடம் இறைஞ்சி நிற்பேன். அதுமட்டுமல்ல; "கிறிஸ்து ஜயந்தி" இரவிலே உங்கட்காக யான் ஒப்புக்கொடுக்கும் பலிபூசைவேளையிலே, கிறிஸ்து பாலன் தமது அருட்பிரசாதத்தினாலும், ஒளியினாலும், சமாதானத்தின் கொடைகளினாலும், சினேகத்தினாலும், உங்களை அபரிமிதமாக நிரப்பியருளும்படி அவரிடம் வேண்டுதல் புரிவேனென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வருடம் முழுவதுமே ஏராளமான காணிக்கைகளை அளிப்பதில் சிறந்த உதார குணத்துடன் முன்வந்த உங்கட்கு யான் ஆற்றக்கூடிய சிறந்த கைம்மாறு வேறெதுவுமேயில்லை. கிறிஸ்து பாலகன் உங்களுடன் பேசட்டும்!.. அவர் வார்த்தைகட்குச் செவிசாய்க்கும் அருள்நிலையும் உங்களில் நிலவட்டும்!......

சென்ற வருடகாலத்தை யான் திரும்பவும் நோக்கி, நல்மனதுடனும் உதார குணத்துடனும் நீங்கள் மனமுவந்துதவிய பல அரிய சந்தர்ப்பங்களைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, நீங்கள் செய்தவற்றிற்காகவும், கொடுத்துதவியவற்றிற்காகவும்யாராவது உங்கட்கு நன்றிகூற இயலுமா?.. அன்புள்ளங்களுடன் நீங்கள் அளித்த நன்கொடைகட்கு யாராவது தகுந்த முறையில் கைம்மாறு செய்ய இயலுமா என்பனபோன்ற வினாக்கள் என்னுள்ளத்தில் எழுகின்றன. இதற்கு விடையாக யான் "இல்லை" என்றே கூறமுடியும். ஏனெனில் இறைவன் மட்டிலும், ஆன்மாக்கள் மட்டிலும் நீங்கள் கொண்டுள்ள அன்பினால் செய்த இவ்வுதவிகள் என்னாலோ அன்றி இவ்வுலகில் உடலெடுத்த எவராலுமே நன்றிகூறப்படக் கூடியனவல்ல. ஏனெனில், உங்கள் ஆன்மாக்களில் பற்றியெரிகிற இறையன்பினாலேயே இவற்றை நீங்கள் உங்கள் அயலார்க்குச் செய்தீர்கள். உங்கள் இதயங்களில் அன்பு பொங்கிவழிந்ததினாலேயே இத் தியாகங்களையும், நன்கொடையுதவுதல்களையும் மேற்கொண்டீர்கள்.

வேதபோதக நாடுகளின் அன்பர்களே!... பரிசுத்த பாப்புதந்தையின் வேதபோதக நாடுகட்கென ஜெப, தப, தானதரும உதவிகளை அளித்துதவும் உங்கட்கு யான் கூறும் "கிறிஸ்து ஜயந்தி வாழ்த்துரை இதோ! .. மறைபரப்புதற் சபையினால் உங்கள் வாழ்க்கையிலே தூண்டிவிடப்பட்ட இறையன்பு, பிறரன்பு என்னும் தீபமானது சுவாலைவிட்டெரிந்து உங்களதும், உங்களைச் சூழவரவுள்ளோரதும் முழு வாழ்க்கையினையுமே நிரப்புவதாக. நித்தியரான இறைவன் மானிட உருவெடுக்கவும், மாட்டுக் குடிலிலே யாவராலும் கைவிடப்பட்ட நிலையிலே பிறக்கவும் அவரை ஆட்கொண்ட அன்புச் சுவாலையானது, நீங்களொவ்வொருவருமே அன்பின் அப்போஸ்தலர்களாக விளங்கும்படி உங்களையும் ஆட்கொள்ளுவதாக. "கிறிஸ்து ஜயந்தி"விழா என்பது அன்பின் நிறைவே. வேதபோதக நாடுகளின் வரலாறு அன்பின் வரலாற்றுரையே. இவ்வன்பின் உரைச்சித்திரத்தில் உங்கட்கும் இடமுண்டல்லவா? இறைவனது அன்பு உங்களில் நிலவுக.

கிறிஸ்துவில் உங்களில் அன்புள்ள,

மொன்சிஞ்ஞோர் மனிக் முத்துக்குமாரு,

(தேசிய வழிகாட்டுநர்),

## தேசிய வேதபோதக சபைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள நேயர் கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்ட

# சில துணுக்குகள்

எமது "காருண்யம்" என்றும் சஞ்சிகையில் இப்பகுதியானது எப்போதுமே இடம்பெறும் ஓர் முக்கிய அம்சமாகும். தேசிய வழிகாட்டுநருக்கு அடிக்கடி கிடைப்பதும், இதயபூர்வமான உரைகளடங்கியதுமான பலகடிதங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சில குறிப்புரைகளே இப்பகுதியில் இடம்பெறுகின்றன. இத்தகைய அன்புள்ளம் படைத்தோர் எம்மிடையே வாழ்ந்துவருகையில் நாம் எதற்கும் அச்சங்கொள்ள வேண்டியது அவசியமில்லையே!... இவர்கள் ஓர் ஒளிச் சுவாலையை ஏற்றியுள்ளனர். ஓர் அடிச்சுவட்டினைப் பொறித்துள்ளனர். இவர்களது அடிச்சுவட்டை மற்றும் பலர் பின்பற்றி வாழவேண்டுமென்பதே தேசிய வழிகாட்டுநரின் தொடர்பான வேண்டுகோளாகும்.

தயவுசெய்து எமக்கு எழுதுங்கள். பரிசுத்த பாப்புதந்தையின் வேதபோதக நாடுகளுக்கென நீங்கள் அன்புடனும், தியாக உள்ளத்துடனும் உவந்தளிக்கும் காணிக்கைகளானவை எமது ஆண்டவரின் நோக்கினிலே மிக மிக விலைமதிப்புடையனவாக விளங்குகின்றன.

### குருமாணவனொருவனுக்காக வாழ்நாட்சேமிப்பு:

"கத்தோலிக்க மெசெஞ்சர்" பத்திரிகையில் வெளியாகும் வேதபோதக நாடுகளைப் பற்றிய தகவல்களடங்கிய பகுதியை யான் எப்போதுமே படித்து வருவதுண்டு. (அப்பகுதி இப்போது ஏன் வெளியிடப்படுவதில்லை என்பதையிட்டு யான் அதிசயப்படுகின்றேன்.) இப்பொழுது "காருண்யம்" என்ற சஞ்சிகை வெளியிடப்படத் தொடங்கியதிலிருந்து, எப்படியோ இதன் ஒவ்வொரு பிரதியையும் யான் பெற்று, பக்கம் பக்கமாகப் படித்து வருகின்றேன். ஒவ்வொரு தடவையும் இச் சஞ்சிகையைப் படிக்கும்பொழுது பாப்புதந்தையின் வேதபோதக நாடுகளுக்காக யான் என்ன செய்யலாம்என எண்ணிப் பார்ப்பதுண்டு. இப்போதோ யான் ஓர் இளைப்பாறிய தாதி, என்னிடம் அதிக செல்வமில்லை இவ்வுலகில் எனது சொந்தமென யான் குறிப்பிடத்தக்கோர் எவருமேயில்லை. எனவே, என் வாழ்க்கையையும் நானாகவே ஓட்டிச் செல்லவேண்டியுள்ளது. "காருண்யம்" சஞ்சிகையிலிருந்து ஏதோவொன்று என் இதயத்தை அருட்டிவிட்டதால் யான் ஒன்றுசெய்யத் தீர்மானித்துள்ளேன். மொன்சிஞ்ஞோர் அவர்களே! எனது வாழ்நாட் சேமிப்பான 3000 ரூபாவை குருத்துவ மாணவனொருவனது பயிற்சிக்கு உதவும்முகமாக இத்துடன் அனுப்புகின்றேன். எனது எதிர்கால வாழ்வுக்கான பணத் தாபிப்பு எதுவும் எனக்கு இப்போது இல்லை! ஆயின் எங்கோ ஓர் இடத்தில் வாழும் இறைவனின் இளைய குரவரொருவரின் மன்றாட்டுப்பலன்கள் எனதாகும் என்பதை யான் அறிந்திருக்கின்றேன். ஓர்நாள் எனது குருமகன்என யான் உரிமையோடு அழைக்கக்கூடிய ஒருவர் எனக்கிருப்பாரல்லவா?"

### கடல்கடந்து சென்று வாழும் இளம் வைத்தியரொருவர்:

"தந்தையே!...நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ள பிரகாரம் எனது படிப்பைத் தொடருவதற்காக சில வருடங்களின் முன் யான் இலங்கையை விட்டுச் சென்று கடல்கடந்த தேசத்தில் வாழ்ந்து வருகின்றேன். கடந்த வருடங்களிலே எனது அன்னை "காருண்யம்" சஞ்சிகைகளின் பிரதிகளை எனக்கு அனுப்பிவந்துள்ளாள். எனது அன்புக்குரிய அன்னை அனுப்பிவைக்கின்றாளே என்பதற்காக ஆரம்பத்தில் அவற்றை யான் வாசித்துவருவதுண்டு. ஆயின் மூன்றாவது பிரதி எனக்குக் கிடைத்தபோதோ அதனைப்படித்து முடிப்பதில் எனக்கு மிகவும் ஆர்வமேற்பட்டிருந்தது. ஏனெனில் எனது கிறிஸ்தவ வாழ்க்கையைப்பற்றி முன்பு எவ்வளவோ அசட்டையாயிருந்த எனது உள்ளத்திலே அது ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது. இச்சஞ்சிகை என் ஆன்மவாழ்க்கையில் செய்த உதவியை யான் பெரிதும் உணர்கின்றேன். எனது பிரிய அன்னை எனக்கு மனமுவந்தளித்த பலஆசீர்வாதங்களுள் இதுவும் ஒன்றெனவே கூறுவேன்.

கடந்த 2வருடங்களாக யான் படித்து எழுதிய பரீட்சையில் இப்பொழுது சித்தியடைந்துள்ளேன். எனவே, எனது நன்றியறிதலாக இத்துடன் 4,500ரூபா பணத்தொகையை அனுப்பிவைத்துள்ளேன். இறைவன் எனக்கருளிய ஏராளமான நன்கொடைகளுக்கும், விசேடமாக ஓர் அதிசய சக்தியுடைய சிறந்த அன்னையை எனக்களித்ததற்கும் நன்றியறிதலாகத் தியாக உள்ளத்துடனும் அன்புணர்வுடனும் யான் அனுப்பும் இக் காணிக்கையை பாப்புதந்தையின் வேதபோதக நாடுகட்கென தயவுசெய்து ஏற்றருள்க"...

### வேதனைப்படுக்கையில் துடிக்கும் இளைஞன்:

"நான் 23அகவையினனான ஓர் இளைஞன். கடந்த 6மாத காலமாக பெரும் எலும்புமுறிவு காரணமாக படுக்கையிலேயே கிடந்து உழன்று வருகின்றேன். நான் அபரிமிதமான ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சாதாரண வாழ்க்கையை வாழும்படியாக எழுந்து நடமாடும் நிலை என்று நேருமோ என்பதை இறைவன் ஒருவரே அறிவார். எனினும் எமக்கு எது நல்லதென்பது இறைவன் அறிந்ததே. நான் இழந்திருந்த அந்த நல்ல தேவனை இவ்வேதனைப்படுக்கையிலே திரும்பவும் கண்டடைந்துள்ளேன். என்னை முழுவதும் ஆட்கொள்கின்ற ஒரு வழியிலே அவரை அறியவும், நேசிக்கவும் யான் கற்றுக் கொண்டதும் இப்படுக்கையிலேதான். அதாவது "காருண்யம்" சஞ்சிகையைப் படித்தறிய நேர்ந்து அதன் நற்செய்திக்குச் செவிசாய்க்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கிட்டியுள்ளது... யான் தங்கட்கு காணிக்கையாக அனுப்புதற்கென என்னிடம் உள்ள தொகையோ வெகு வெகு சொற்பம். ஆயின் துன்பதுரிதங்களுடே செய்யப்படும் செபவேண்டுதல்கள் இறைவனால் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப்படுமென நீங்கள் கூறியவற்றை நினைவுகூருகின்றேன். எனவே, அன்புக்குரிய தந்தையே, பாப்பு தந்தையின் வேதபோதக நாடுகளுக்கென நாளின் ஒவ்வோர் நிமிடத்தையும், எனது அசைவுகளின் ஒவ்வோர் வேதனையையும், இறைவனின் சித்தத்தை ஏற்று வாழும் ஒவ்வோர் செயலையும் இதய பூர்வமான சிநேகத்துடன் ஒப்புக்கொடுத்து வருகின்றேன் என்பதை இக்கடிதமூலம் உங்கட்குத் தெரிவிக்கின்றேன். எத்தனை காலத்திற்கு இவ்வைத்தியசாலைச் சிறைவாசம் நீடிக்குமோ யான் அறியேன். எது எப்படியிருப்பினும் ஒவ்வொரு கணப்பொழுதையும் இறைவனுக்காகவே வாழ முன்வந்துள்ளேன்".

### இளம் அன்னையொருத்தி

சென்றமாதம் எனது முதற் குழந்தையை யான் பிரசவிப்பதற்கு முன்பு எனது அன்புக் கணவர் தங்கட்கு எழுதியிருந்தார். நல்ல இறைவன் எம் இருவருக்கும் எவ்வளவோ பெரிய நன்மைகளைச் செய்துள்ளார். எமது விவாக வைபவத்தின் பின்னர் ஒருநாளாவது நாம் அதிருப்தியுற்றவர்களாய் வாழ்ந்ததில்லை. எமது இளம் குடும்ப வாழ்வை நாம் இறைவனது பராமரிப்பிலேயே விட்டுவைத்துள்ளோம். இன்று இறைவன் ஓர் அழகான பெண் குழவியை எம் கை நிறைய, மனம் நிறையக் கொடுத்துள்ளார். அவரது பராமரிப்பு இருந்திராவிடின் இக் குழந்தையை நாம் இழந்திருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்திருப்போம். மிக மிகக் கஷ்டமான பிரசவத்தின் பின்பு எம் இல்லத்தில் ஒளி திரும்பவும் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. சென்ற சில கிழமைகளாக நாம் இருவரும் சொரிந்த கண்ணீரை மறந்து, இன்று பூத்துக் குலுங்கும் புன்னகையில் இன்பங்காணுகின்றோம். எனவே, இறைவன் நமக்குச் செய்த அளவிறந்த நன்மைகட்காகவும் விசேஷமாக அழகான பெண் குழவியை எம் கைகளில் அளித்தமைக்காகவும் இறைவனுக்கு மனமார்ந்த நன்றியறிதல்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

[மறுபக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகளிர் மன்றம்

அன்புடை நேயர்களே !........வணக்கம் !........

ஆகமனகாலம் ஆரம்பித்து விட்டது. இதோ...வனுந்தரத்தின் குரலொலி சப்திக்கின்றதே !..."குன்றுகள் மட்டமாக்கப்படட்டும்...பள்ளங்கள் தூர்க்கப்படட்டும்...நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்" என்ற வார்த்தைகள் நம் இதயங்களின் ஆழத்தில் ஒலிக்கின்றதே.

கிறிஸ்து ஜயந்தி இன்னும் நான்கு வாரங்களில் வந்துவிடும். எளிமை, தாழ்மை, பொறுமையே உருவான பாலக யேசுவின் வருகைக்கு நம்மை நாமே ஆயத்தப்படுத்த வேண்டிய நாட்கள் இவை. நல்மனதுள்ளோர்க்குச் சமாதானத்தை நல்கப் பாரில் வந்த தேவன் நம்மையும் தமது அருட்பிரசாதங்களினால் ஆட்கொள்ள வேண்டுமா ?......இதோ !... விழித்தெழுவோம். நம் பாவப்பழக்கங்களை ஒழிப்போம். புண்ணிய நெறியை நாடுவோம். அகதிகட்கும், ஆதரவற்றோர்க்கும், அநாதைகட்கும், ஏழைகட்கும், துன்ப துரிதங்களினால் துடிப்பவர்க்கும், தனிமையில் தவிப்பவர்க்கும் கிறிஸ்து ஜயந்தி நாட்களில் நம் நல்மனதைக் காண்பித்து அவர்களை மகிழ்விக்க ஆவன செய்வோமாக......

அண்ணு.

# பஸ் போயிடுமே அம்மா!....

" அம்மா !...... போயிட்டு வர்றோம் !......" கத்திக்கொண்டே புத்தகப்பையுடன் தெருவை நோக்கி ஓடினர் மாலாவும் கலாவும். மாலாவுக்கு ஏழுவயதிருக்கும். 2ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். கலா ஒரு வயதுக் இளையவள். அவளும் அதே பாடசாலையில் முதலாம் வகுப்பில் இணைந்திருந்தாள். "உணவுப் பார்சல் மேசையில் வைத்தேனே!... எடுத்தீர்களா?..." என்று கேட்டபடி வெளியே வந்த அம்மா, "சரி!... சரி!!... இன்று காலையில் நீங்கள் காலைச்செபம் சொன்னதாகத் தெரியவில்லையே!" என்று கேட்டாள். வாயிற்கதவண்டை நின்று திரும்பிப்பார்த்த மாலா "அம்மா!... இன்னிக்கு எங்களுக்கு சோதனை, வாய்ப்பாடு படித்திட்டிருந்ததிலே செபம் சொல்ல மறந்திட்டோம். ஒவ்வொருநாளும் தானே சொல்றோம். இன்னிக்கு சொல்லாட்டி என்னம்மா?" கேட்டுக்கொண்டே வெளியே செல்ல ஆயத்தமானாள். "அம்மா!... ஸ்கூல் பஸ் போயிடுமே... அப்புறம்... அப்புறம்... மற்ற பஸ் ஒரே சனம். எங்களையெல்லாம் விட்டிட்டுப் போயிடுவாங்க!..." இது கலாவின் அவசரப் பேச்சு. "பஸ் போனால் போகட்டும். முதலில் உள்ளே வாருங்கள். காலைச் செபம் சொல்லாமல் நீங்கள் ஒருபோதும் போகக்கூடாது. புறப்படும்போது இருதய அரசர் படத்தின்முன்னே சொல்லும் செபத்தையும்தான் மறந்துவிட்டீர்கள்." அம்மாவின் கடுமையான குரல்கேட்டு அடங்கிப்போன கலாவும் மாலாவும் உள்ளே வந்தனர்.

முழந்தாளிட்டனர் தம் அன்னையுடன். காலைச் செபத்தை ஓதினர். தடதடவென்று ஜெபத்தைச் சொல்லிமுடிக்க முனைந்த கலாவின் தலையில் அம்மா 'நறுக்' என்று வைத்தாள் ஒரு குட்டு. காலைச் செபம் முடிந்ததும், வீட்டை விட்டுப் புறப்படும்போது வழமையாகச் சொல்லும் ஒப்புக்கொடுக்கும் ஜெபத்லதயும் ஓதினர். முகத்தை 'உர்' என்று வைத்துக்கொண்டே ஓடினர் தெருவுக்கு. தன் மழலைச் செல்வங்களை இருதய அரசரிடம் ஒப்படைத்துவிட்ட திருப்தியுடன் வீட்டினுள்ளே சென்றாள் அம்மா. தெருவிற் சென்ற மாலா பாடசாலை பஸ் போய்விட்டதை அவதானித்தாள். "பாரு மாலா!... இந்த அம்மாவாலே இனிமே பஸ் கிடைக்காம திண்டாடப்போறோம்... இல்லையா?... நேரத்தோடு பாடசாலைக்குப் போயிருந்தால் சற்றுநேரம் தோழிகளோடு விளையாடி மகிழ்ந்திருக்கக்கூடிய இன்பம் இல்லாமற் போய்விட்டதே என்ற வேதனை அவளுக்கு. சொல்லி வைத்தாற்போல மற்ற பஸ்ஸும் மிகவும் பிந்திவிட்டது. பஸ் வந்தபோது ஒரே சன நெரிசல். எப்படியோ ஒரு கண்ணியவான் துணையாலே சிறுமியர் இருவரும் பஸ்ஸுக்குள் ஏறிவிட்டனர். "கண்டும் சிண்டுமாக இதுகளெல்லாம் பாடசாலை பஸ்ஸில் போனாலென்ன" என்ற யாரோ ஒருவரது முணுமுணுப்புக்கும் ஆளாகினர்.

பஸ் $\frac{1}{2}$மைல் தூரம் போயிருக்கும். ஓரிடத்தில் தரித்தது. "பஸ் அக்ஸிடெண்ட்" எல்லோர் வாயிலும் இதேபேச்சு. அத்தனை பெரிய மனிதர்களுக்கூடாகவும் மாலாவும் கலாவும் எட்டிப்பார்த்தனர். "பார் கலா !...அது நம்ம ஸ்கூல் பஸ் ஆச்சே. ஒரு லொறியோடு அடிபட்டு நிற்கிறதே. அச்சச்சோ !..." என்றாள் மாலா! "ஆமா அக்கா அங்கே பாரு. ...நம்ம வனிதாவை. இரத்தம் வடிய வடிய தூக்கிட்டல்லா போறாங்க ஐயையோ !... கத்தினாள் கலா. "ஆம் ரொம்பப் பெரிய விபத்தாம். ஏறக்குறைய 30பிள்ளைகட்கு காயமாம் !...எத்தனை பெற்றோர் தவிக்கப் போகுதுகளோ" சொல்லியவாறே பஸ் சாரதி ஏறினான் பஸ்ஸில். பஸ் திருப்பப்பட்டு வேறு மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டது. அக்கா ! நாம் அந்த பஸ்ஸிலே வந்திருந்தா...... நாங்களும் அடிபட்டிருப்போம் இல்லியா"... முணுமுணுத்தாள் கலா. மாலாவுக்கு அதிர்ச்சியில் எதுவுமே பேசமுடியவில்லை.

பாடசாலை அண்மையில் பஸ் தரித்தது. இறங்கி ஓடினர் மாலாவும் கலாவும். அங்கே தலைமைக் கன்னிகை உட்பட ஆசிரியைகள், மாணவிகள் அனைவோரும் வாயிலில் கூடிநின்று பாடசாலை பஸ்ஸுக்கு ஏற்பட்ட விபத்தைப் பற்றித்தான் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தனர். மாலாவும் கலாவும் தாங்கள் கண்ட காட்சியைக்கூறினர். எத்தனையோ பெற்றோர்கள் கலங்கிய கண்களுடன் வந்துபோய்க்கொண்டிருந்தனர். திடீரென்று "கலா!...அதோ அம்மா வர்றாவே !..." மாலா உற்சாகமாகக் கூறினாள். இருவரும் ஓடினர் அம்மாவிடம். "அம்மா எங்களுக்கு ஒண்ணும் இல்லே!... நாம் அடுத்தபஸ்ஸிலேதானே வந்தோம்...இது கலாவின் ஒலி!..." "அம்மா நீங்கமட்டும் செபம் சொல்ல எங்களை மறித்திராவிட்டால் நீங்க ஆஸ்பத்திரியிலே தானே எங்களைப்பார்த்திருப்பிங்க இல்லையா" என்றாள் மாலா.

"ஆம் !...மாலா !...இருதய அரசரது புதுமையைப் பார்த்தீர்களா ?......நீங்கள் எனது சொல்லுக்கு அமைந்து செபம் சொல்ல நின்றதால் தப்பினீர்கள். இல்லாவிடில் இங்கே அழுது கலங்கும் பெற்றோர்களுடன் நானும் ஒருவளாகியிருப்பேன்" என்று கூறிய அம்மா மாலாவையும் கலாவையும் அழைத்துக் கொண்டு போய் பாடசாலை வளவிலிருந்த இருதய அரசர் சுரூபத்தின் முன்னே மண்டியிட்டாள் நன்றி செலுத்த.

# இல்லத்தில் புனிதம் நிலவ!......

"அடேடே !...வனஜாவா? ...வாடியம்மா !...வா !...அப்பாடி !...எத்தனை நாட்களுக்குப் பிறகு சந்திக்கின்றோம். உட்கார் வனஜா ...உன்னைக் கண்டதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா ?" தன் வீடுதேடிவந்த வனஜாவை ஆர்வம் பொங்க வரவேற்றாள் ராஜி. "வீட்டிலே எங்கே ஒழியறது ராஜி !......மூன்று வேளைச் சமையலிலேயே முழுப்பொழுதும் போய்விடுகிறதே......இப்படித்தான் ஒரோரு வேளையிலே சிநேகிதிகளைப் பார்க்கலாமென்று கிளம்பினால் உண்டு"...சொல்லிக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள் வனஜா. "அம்மா! ...இந்த லட்டைக் கொஞ்சம் பதம் பார்த்து விடுறீங்களா" சமையலறையிலிருந்து ராஜியின் புதல்வி விஜிதாவின் குரல் ஒலித்தது. "விஜி லட்டுச் செய்யப்பழகுகிறாள். ஒவ்வொருநாள் மாலையிலும் ஏதாவது ஒரு சிற்றுண்டி செய்யப் பழக்குகிறேன். அதுவே நாலு மணித்தேநீருக்கும் சிற்றுண்டியாகி விடுகின்றது ...வனஜா உள்ளே வாவேன்...விஜிக்கும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே கதைப்போம்" என்று சொல்லியபடியே எழுந்தாள் ராஜி. இருவரும் உள்ளே போனார்கள் வனஜா அக்கமும் பக்கமும் பார்த்து ராஜியின் வீடு இருக்கும் புனிதத்தைக் கண்டு அதிசயித்துக் கொண்டே போனாள். லட்டைப் பதம் பார்த்து விஜிதாவுக்கு உதவியபடி பழைய விஷயங்களையிட்டு தோழியுடன் அலசினாள் ராஜி. தேநீர் பரிமாறிக் கொண்டபின்னர் தோழிகள் இருவரும் முன்பக்கம்வந்து அமர்ந்தனர். "ராஜி...நான் கேட்கிறேனே யென்று ஒன்றும் தப்பாக எண்ணாதே. உன்வீடு எவ்வளவு சுத்தமாக இருக்கிறது. படுக்கையறைகள், சமையலறைகள் உட்பட எத்துணை புனிதமாகக் காட்சியளிக்கின்றன. அத்துடன் நீயும் உன் பிள்ளைகளும் கூட அழகாக துப்புரவாக உடையணிந்து காணப்படுகின்றீர்களே. எனது வீடோ எப்படித்தான் நான் முயற்சித்தாலும் குப்பையும் கூளமுமாகக் கிடக்கும். விருந்தினர் திடீரென வந்துவிட்டாலோ எனக்கு ரொம்ப வெட்கமாகிவிடுகிறது. எனக்கும் உனது சாதுரியத்தைக் கொஞ்சம் சொல்லிக் கொடுக்கமாட்டாயா ?" ஆவலோடு கேட்டாள் வனஜா. ராஜி கூறியவற்றில் சில அம்சங்கள் இதோ:

(1) வீட்டின் எவ்வறையாயிருப்பினும் அங்கே அவசியமற்றபொருட்களும் தேங்கி நிறையவிடக்கூடாது. இப்படி அறைகள் அனாவசிய பொருட்களால் நிறைந்திருப்பதனால் அவற்றை நாளாந்தம் இலகுவில் சுத்தஞ் செய்ய முடியாது. இதனால் தூசி, ஒட்டறை, குப்பை கூளங்கள் நிறைய ஏதுவாகின்றது.

(2) நாளில் ஒருதடவையெனினும் வீட்டைத் துப்புரவு செய்து பெருக்கல் வேண்டும். கிழமையில் ஒருதடவை பொருட்களைத் தூசிதட்டிச் சுத்தம் செய்தல் வேண்டும். மாதத்தில் ஒருமுறையென்கிலும் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்யலாம். வருடத்துக்கொருமுறை எல்லாப் பொருட்களையும் வெளியே அகற்றி பூரணசுத்தம் செய்யவேண்டும்.

(3) வீட்டிலுள்ள அத்தனை பேரும் குழந்தைகள் உட்பட சில முறையான வழக்கங்களைக் கைக்கொள்ளப் பழக்க வேண்டும். காலையிலெழுந்ததும் ஒவ்வொருவரும் தத்தம் படுக்கைகளை ஒழுங்காக்கி மேற்போர்வைகளை அழகாக விரித்துவிடவேண்டும். தமது உடைகளை ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கவிடாமல் உடனுக்குடனே மடித்து வைக்கவேண்டும். பிள்ளைகள் படித்துமுடிந்தவுடன் தமது புத்தகங்களையோ, அன்றேல் விளையாடி முடிந்தவுடன் விளையாட்டுப் பொருட்களையோ அங்கங்கே எறிந்துவிட்டு ஓடாமல் அதற்குரிய இடத்திலே ஒழுங்காக வைக்கவேண்டும். உணவு உட்கொண்டு முடிந்ததும் அவ்விடத்தையும், சமையல்வேலை முடிந்ததும் சமையலறையையும் உடனடியாகத் துப்புரவுசெய்து விடவேண்டும்.

(4) அலுமாரிகளின் மேலும், மேசைகளின் கீழும், பொருட்களை அடுக்கிவைத்தல் ஆகாது. இவை பார்ப்பதற்கு மிகவும் அசிங்கமாக இருக்கும். எவ்வளவு தொகையான பொருட்கள் வீட்டிலிருப்பினும் அதைப் புனிதமாக அடுக்கி வைப்பதிலேயே ஓர் அழகு உண்டு.

(5) வீட்டுச் சுவர்களில் அளவுமீறிப் படங்கள் இருத்தல் வீட்டின் புனிதத்தைக் குறைக்கும். ஆங்காங்கே இரண்டொரு படங்கள் பார்ப்பதற்கு கவர்ச்சியுள்ளனவாக அமைக்கப்படல் அழகுக்கு அழகூட்டும்.

(6) பிள்ளைகள் தங்கி விளையாடுவதற்கு குறிக்கப்பட்ட ஓர் இடம் அமைந்திருத்தல் அவசியம். பிள்ளைகள் எங்கும் ஓடியாடி விளையாடுவதனால் குப்பைகூளங்கள் எல்லாவிடங்களிலும் பரவவும், வீடு முழுவதுமே அலங்கோலமான நிலையடையவும் ஏதுவாகின்றது. சிறு வயதிலிருந்தே இப்பழக்கம் அவர்களிலே கொண்டுவரப்படவேண்டியது.

(7) ஏதாவது பழங்களை உட்கொண்டபின் தோலையோ, விதைகளையோ ஆங்காங்கே எறியாமலும், பாவிப்புக்குதவாத காகிதங்களை கண்ட இடத்தில் போட்டுவிட்டுப் போகாமலும், பானவகைகள் அருந்திய பாத்திரங்களை எங்கும் வைக்காமல் உரிய இடத்தில் கொண்டுபோய் வைப்பதனாலும் வீட்டின் புனிதத்தைக் காப்பாற்றலாம்.

இவ்விதமாக ராஜி கூறியவற்றை மனமகிழ்வோடு கேட்டாள் வனஜா. "பார்த்தாயா ராஜி !...இதெல்லாம் எனக்குத் தெரியவில்லையே. இன்றிலிருந்து நானும் உனது முறைகளைக் கையாளப் போகின்றேன்" என்று கூறி விடைபெற்றாள் தோழியிடம். அடுத்த தடவை ராஜி வனஜா வீட்டுக்குப் போனபோது அவள்வீடு மிகவும் புனிதமாகக் காட்சியளித்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமா ?......

## கருண்யம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்புக்குரிய மொன்சிஞ்ஞோர் அவர்களே!... நாம இருவரும் தொடர்ந்து ஒருவர் ஒருவரைப் பிரமாணிக்கமாய் நேசித்து வாழ்க்கைப் பாதையை ஓட்டவும், எமது சிறு குழவியை இறைவனுக்கேற்றதாக வளர்க்கவும் இறைவனின் கருணையை எமக்காக இறைஞ்சுங்கள். எமது நன்றியறிதலைத் தெரிவிக்கும்முகமாக, பாப்புதந்தையின் வேதபோதக நாடுகட்காக எமது பிறந்தினக் கொண்டாட்டங்களை யாம் துறந்துவிட்டு இத்துடன் 300 ரூபா அன்பளிப்பை யாம் மூவருமாக அனுப்பி வைக்கின்றோம். திருப்பவும் தங்கட்கு எழுதக் காத்திருக்கின்றோம் !......"

**இல்லிடமற்ற அகதிகள் ஐவர் :**

அப்பா, அம்மா, மூன்று பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பம் எம்முடையது. எம்மனைவோர் பேராலும் இக்கடிதத்தைத் தங்கட்கு எழுதுகின்றேன். எனக்கு வயது 19. யானே என் குடும்பத்தில் மூத்தபுதல்வன். நாம் இல்லிடமற்றவர்களாய் அடிக்கடி உண்ண உணவுமற்றவர்களாய் வாழ்ந்து வருகின்றோம். தற்சமயம் ஒரு சிநே

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கு மேடையை நோக்கி

பொழுது புலரவில்லை. கைதி மரிசூசையின் அறை திறக்கப்பட்டது. திறந்தவர்கள்—நீதிபதி, வார்டன், காவலன். திறந்ததின் நோக்கம்- கைதி மரிசூசை அன்று பொழுது விடியுமுன் தூக்கிவிடப்படவேண்டும்.

அறையின் ஒரு மூலையில் மரிசூசை தூங்கிக்கொண்டிருந்தான். தூக்கில் போடுவதற்குப் பன்னிரண்டு மணி நேரத்திற்கு முன்பு முறைப்படி அவனுக்கு நேற்றே வார்டன் தூக்கிலிடப்பட இருப்பதைக் கூறியிருந்தார். அப்பொழுதும் அவன் அமைதியாகவே இருந்தான். இன்றும் அமைதியாகத் தூங்கிக் கொண்டான். அவருடைய சேவையில் இப்படிப்பட்டவனை இதுவரை கண்டதேயில்லை. பெரிய, பெரிய கேடிகள் கூடத் தூக்கிலிடப்படும் நாளைக் கூறியவுடன், சிறு குழந்தைகளைப்போல் கதறி அழுததையும், பித்துப் பிடித்தவர்களைப்போல் கத்தி, உருண்டு புரள்வதையும் அவர் கண்டுள்ளார். இவனே அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்!

ஒரே சொத்தான ஒரு பசுமாட்டினால் ஏற்பட்ட கொலையில் அவன்மேல் குற்றம்சாட்டப்பட்டு இன்று தூக்கு மேடையில் தொங்கப்போகின்றான். பரமஏழை. மனைவியும் இரண்டு பிள்ளைகளும். சுமார் ஐம்பது மைல் தொலைவில் உள்ள கிராமத்தில் உள்ளார்கள். அவனை வந்து பார்க்கக்கூட பணவசதியற்றவர்கள். ஒரேமுறை இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு, அழுது புலம்பிக் கொண்டு அவன் மனைவி வந்துவிட்டுப் போனாள்.

தூங்கிக்கொண்டிருந்த மரிசூசையைக் காவலன் எழுப்பினான். கையில் விலங்கு பூட்டப்பட்டுத் தூக்கு மேடையை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டான்.

மேடையை நெருங்கிவிட்டனர். இலேசாகப் பனி பெய்து கொண்டிருந்தது. மேடையின்மேல் தூக்குப் போடுபவன் தயாராக நின்றுகொண்டிருந்தான். எத்தனையோ பேர்களை இதுவரை தூக்கிவிட்டுள்ளான். அது அவனுக்கு தொழில். அதுவும் பரம்பரைத் தொழில். ஒரு கைதியைத் தூக்கிவிட ஊதியம் ரூபா பத்து; மற்றும் இரண்டு புட்டி கள். இரண்டு புட்டி கள்ளையும் குடித்துவிட்டு நின்று கொண்டிருந்தான். அவன் அருகில் அவனுடைய எட்டுவயதுப் பையனும் நின்று கொண்டிருந்தான். பையனும் பல பார்த்துப் பழக்கப்பட்டவன்.

மேடையின் அருகில் அவன் நிறுத்தப்பட்டான். அச்சமயத்தில் குருவானவர் ஒருவர் மிக வேகமாக ஓடி வந்தார். சிறைச்சாலைக்கு விஜயம்செய்யும் குருவானவர் அவர். அவர் வந்தது முதல் அவனுக்குப் பாவமன்னிப்பு பெற்றுத் தந்து, திவ்விய நற்கருணை தரவேண்டும் என்று பலமுறை முயன்றார். அவனே அதைப்பற்றி அக்கறை கொள்ளவேயில்லை. இன்று தூக்கு என்று கேள்விப்பட்டார்; சாவதற்கு முன்பாகிலும் அவன் மனம் திரும்பமாட்டானா என்ற நப்பாசையில் இப்பொழுது அவர் ஓடிவந்தார்.

சட்டத்தின் காவலர் நீதிபதி அவன் அருகில் சென்று கடைசி வாக்குமூலம் கேட்டார். "நான் என்னங்க. சொல்வது? எல்லாவற்றையும் கோர்ட்டிலே சொல்லிப் புட்டேன். அவ்வளவு தாங்கோ. இனி என்ன சொல்வது?" அத்துடன் முடித்துக்கொண்டான். அதை எழுதிக் கொண்ட அவர் அவனுடைய விரல் அச்சுவையும் பதித்துக் கொண்டார். "கடைசியா ஒன்றுங்கோ. நான் தனியா சாமியாரிடம் பேசனும், நல்ல வேளையா அவரே வந்துவிட்டார்".

சாமியாரிடம் அவன் சில நிமிடங்கள்தான் பேசினான். திவ்வியநற்கருணையும் உட்கொண்டான்.

சாமியாருடன் ஒரு தூய காரியத்தைச் செய்துவிட்ட திருப்தி.

இன்னும் சரியாகப் பொழுது புலரவில்லை. அவன் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அவனுடைய முகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டது. கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது. வார்டன் தன்னுடைய கைக்குட்டையை ஆட்டினார். தூக்குப்போடுபவன் வேலையை — கடமையைச் செய்தான், கைதி நின்றுகொண்டிருந்த பலகை உடனே பிளந்துகொண்டது. மிக வேகமாக, பயங்கரமாக அவன் பாதாளத்தில் விழுந்தான். கயிறு இறுகிக்கொண்டது.

எட்டு வயதுப் பையன் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லாரும் திரும்பினர். நீதிபதி விடை பெற்றுக் கொண்டார். பின்பு வார்டன் சாமியாரிடம் சொன்னார்: "பாதர், எனக்கு என்னவோ இவன் கொலை செய்திருப்பானு தோன்றவில்லை. சூழ்நிலை இவனைக் குற்றவாளியாக்கிவிட்டது. பணவசதியும், பக்கபலமும் இருந்து அப்பீல் போயிருந்தால் கண்டிப்பாக விடுதலை கிடைச்சியிருக்கும். என்ன செய்வது? அவன் ஏழை. சட்டத்தின் இடுக்கில் அகப்பட்டுக்கொண்டான். பாதர் ஆயிரத்தில் ஒன்று இப்படித்தான் ஆகிவிடுகின்றது."

குருவானவர் ஒன்றும் சொல்லவில்லை. வார்டன் விடை பெற்றுக்கொண்டார். தூக்கிலிடுவதற்கு முன்பு மரிசூசை கூறியது சாமியார் நினைவில் அலைமோதியது. "சாமி, குற்றவாளி இல்லே. நான் பாவி இல்லே, அதனால் தான் நான் நீங்க வந்தபோதெல்லாம், பாவசங்கீர்த்தனம் செய்ய வரவில்லை. நான் என்ன பாவம் செய்தேனு பாவசங்கீர்த்தனம் செய்ய? என் மேலே கேசு போட்டாங்கோ, சாமி நம்மோ ஏசு நாதர் சிலுவையிலே தொங்கும்போது என்ன சொன்னரு. அதான் சாமி, நான் பலமுறை பிரசங்கத்தில் கேட்டுள்ளேன். அவரு சொன்னரு: அவங்கோ தெரியாமே செய்றாங்கோ; அவங்களை மன்னியும்; அப்படினு சொன்னரு; சாமி அதைத் தான் நானும் இப்போ சொல்றேன்."

சாமியாரின் கண்ணில் நீர் படிந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு காலை பூசை வைக்கக் கோவிலுக்கு வேகமாகச் சென்றார்.

— த. வின்சென்ட்,

நன்றி: சத்திய சுடர்

# அனைத்துலக ஆயர்கள் பேரவையின் சாதனைகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலநாடுகளிடை காணப்படும் ஆத்மீக ஏகாதிபத்தியம். வளர்ச்சியடையும் நாடுகளை நாம் மறக்கக்கூடாது" என்றார் கர்தினல் மார்ட்டி.

திருத்தந்தையுடனும் தேசிய ஆயர்கள் சங்கங்களுடனும் தொடர்புகொள்ளும் வகையில் பேரவையின் செயலகம் விரிவுபடுத்தியிருப்பது பாராட்டத்தக்கது என்றார் கர்தினல் மார்ட்டி.

ஆயர்களிடமிருந்து திருத்தந்தை எதிர்பார்க்கும் உதவியை அளிக்கவும் ஆயர்கள் தங்கள் கூட்டுப் பொறுப்பைச் செயற்படுத்தவும் இத்தச் செயலகம் வாய்ப்பளிக்கும்.

1971ஆம் ஆண்டில் மீண்டும் ஒருமுறை பேரவை கூடும். தற்கால வாழ்வின் முக்கிய பிரச்சினைகள் எவை என்பதை நன்கு அறிந்து திருச்சபையின் படிப்பினைகளை அவற்றோடு பொருத்தும் பணிபற்றி அடுத்த பேரவையில் விவாதிக்கப்படும்.

தற்கால உலகின் தேவைகளுக்கு ஏற்றவகையில் பிரெஞ்சுத் திருச்சபைகள் மறைபோதகப் பணியை ஆற்றி வருகிறதென்றும் கர்தினல் மார்ட்டி கூறினர்.

## ஜெர்மனிய கருதினல் கருத்துகள்

அனைத்துலக ஆயர் பேரவை ஆற்றிய பணிகள்பற்றி மூனிக் கர்தினல் டோஃப்னர் மனநிறைவு தெரிவித்தார், ஆயர்களின் குழுத் தன்மையையும் கூட்டுப் பொறுப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் பேரவை தன்னையே சீரமைத்துவருகிறது; அது வகுத்த நிகழ்ச்சி நிரலின்படி தன் வேலையை நன்கு செய்துள்ளது என்றார்.

பேரவையின் அமைப்பிலும் சீர்திருத்தம் ஏற்படுமென்றும், திருச்சபையை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இச்சீர்திருத்தம் உதவும் என்றும் கர்தினல் நம்பிக்கை தெரிவித்தார். திரு ஆட்சிபீடத்திற்கும், பல்வேறு நாடுகளிலுள்ள திருச்சபைகளுக்குமிடையே கூட்டுப் பொறுப்பும் ஒத்துழைப்பும் ஏற்படும்பொழுது இப்பிரச்சினைகளுக்கு இன்னும் எளிதில் தீர்வு காண முடியுமென்றும் கர்தினல் டோஃப்னர் கூறினர்.

---


வத்திக்கான் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு

### இறைபிறப்பு விழாச்சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்:

டிசம்பர் 27ஆம் திகதி

இலங்கை நேரம்:

இரவு 8-35 மணி

அலை நீளம்:

சிற்றலை (*Short Waves*)

13 மீட்டர், 16 மீட்டர்,

1. மறையுரை.
2. "அன்பின்நிறைவாய்ப் பிறந்தாய் நீ" -பாடல்
3. ஓரங்க நாடகம்
4. குழுவிசை.

குறிப்பு: ஒவ்வொரு திங்கள் அன்றும் வியாழன் அன்றும் மேற் குறிப்பிட்டுள்ள நேரத்தில், அதே அலை வரிசையில் வத்திக்கான் வானொலியின் தமிழ் ஒலிபரப்பைக் கேட்கலாம். இத் தமிழ் ஒலிபரப்புப்பகுதியை எவ்வாறு சிறப்புறச் செய்யலாம் என்பது பற்றிய உங்கள் கருத்துக்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:

சுவாமி ஜோஸப் சேவியர்
India & S. E. Asia Section
(Tamil)
Vatican Radio-Vatican City


---


### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் இரக்கத்தாலும் பற்பல புகழ் நாமதேயங்கொண்ட தேவதாயின் அனுக்கிரகத்தாலும், புனிதர்களாகிய சூசையப்பர், ததேயு, அந்தோனியார் இவர்களின் மன்றாட்டாலும் நான் கேட்டுக்கொண்டபடி எனக்கிருந்த வருத்தங்கள் யாவும் சுகமடைந்து வருகின்றன. இவர்களின் நாமம் புகழப்படுவதாக. உமது அடியாள்

[146-69]


---

# இரட்சணிய சரித்திரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்க பக்தியின்றி வெளிச்சடங்குகளில் மாத்திரம் மக்கள் கவனம் செலுத்தினர். இவ்வேளை தேவன தலையிட்டு இஸ்ராயேலுக்கு இரண்டு தீர்க்கதரிசிகளை அனுப்பினர். அவர்கள் ஆமோஸ், ஓசி என்பவர் ஆவர். ஆமோஸ் சமூக நீதியையும் உண்மையான உள் ஆராதனையையும் போதித்தார். (ஆமோஸ் 7: 14—15) இவர் தெற்கில் பிறந்தபொழுதிலும் வடக்கில் உள்ள இஸ்ராயேல் இராச்சியத்திலேயே விசேஷமாகப் பெத்தல்என்ற இடத்தின் சுற்றுடலில் தொண்டாற்றினர். இவர் வெளிச் சடங்குகளைக் கண்டித்தார். மக்கள் சட்டத்தின் பிரமாணங்களை வெளியரங்கமாக அனுசரித்தனர். ஆனல் உண்மையான பக்தியும் உள்ளரங்க சீவியமும் குறையலாயிற்று. செல்வந்தர் ஏழைகளை வருத்துவதையும் அதனல் உண்டாகும் சமூக கேட்டையும் கண்டித்தார். அகங்காரம் மிக்கவர்களின் வீழ்ச்சியையும் செல்வந்தர்களின் அழிவையும் சமய தலங்களின் அழிவையும் முன்னறிவித்தார். இவர் நாட்டைவிட்டு ஓடவேண்டியிருந்தது. தாவீதின் சந்ததியிலிருந்து ஒருவர் தோன்றி மீட்சிஅளிப்பாரென்றும்முன்னறிவித்தார். இவருடைய தீர்க்கதரிசனங்களில் இரட்சணியம் பிறஜாதியாருக்கும் உண்டென்ற சாயலைக் காணலாம். இதே எண்ணத்தை மத்தேயு 28: 18—20 காண்க.

# காருண்யம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திதா நாம் தங்குவதற்கு ஓர் சிறு புகலிடம் அளித்துள்ளார். நாம்உங்களது "காருண்யம்" சஞ்சிகையைப் படிக்க நேர்ந்தது. அதிலிருந்து எவ்வளவோ அதிகமான விஷயங்களை அறிந்து கொண்டுள்ளோம். கடந்த 4மாதகாலமாக எமது ஒவ்வோர் விரக்தி நிலையையும், ஒவ்வோர் மனத்துயரின் மணித்தியாலப் பொழுதுகளையும் நாம் வேதபோதக நாடுகளுக்காக ஒப்புக் கொடுத்து வருகின்றோம். ஒவ்வோர் இரவும் எமது தந்தையாரது தலைமையில் யாம் குடும்ப செபமாலையும் மற்றும், செபவேண்டுதல்களும் புரிந்து இக்கருத்துக்காக மன்றாடிவருகின்றோம். எம்மிடமுள்ள சொற்பத்திலிருந்து வேதபோதகநாடுகளுக்காக யாம் எல்லோருமே சேர்ந்து சேமித்து ஒரு மிகச்சிறு தொகையை எமது வேண்டுதல்களுடன் இணைத்து அனுப்புகின்றோம். கடந்த 3மாதகாலமாக நாம் சேமித்த தொகை 2ரூபா 85 சதம் மட்டுமே. எம்மிலும் பார்க்கக் கூடிய வறுமையில் திண்டாடும் யாருக்காவது உதவும்படி நாம் அனுப்பும் இச்சிறு காணிக்கையை ஏற்றருள்க. எமது இச்செயலுக்கு எம்மை வழிகாட்டியுதவிய "காருண்யம்" என்னும் சஞ்சிகை எமது இருண்டவாழ்க்கையில் வீசிய ஒளிச்சுடரேயாகும். இச்சஞ்சிகை மற்றும் பல இதயங்களிலே தனது ஒளிச்சுடரை அள்ளி இறைக்கட்டும்!"...

* * *

'கிறிஸ்து ஜயந்தி' இதோ!... வருகின்றது!... பரப்புதந்தையின் வேதபோதக நாடுகட்கென யேசு பாலகனின் பேரால் நீங்கள் என்னசெய்யப் போகின்றீர்கள்?... இறைவனின் நாமத்தினலே உங்களை நோக்கி அபயக்குரலெழுப்பும் ஊரற்ற, பேரற்ற, இல்லிடமற்ற, உணவற்ற ஆயிரக்கணக்கான சோதர சோதரிகட்காக என்ன செய்யப் போகிறீர்கள்?... இவர்களது கரங்கள் உங்களை நோக்கி ஆவலோடு நீட்டப்பட்டுள்ளனவே!...

இவர்களது வெறுமையான இதயங்கள் மாட்டுக்குடிலில் மானிடனான பரமனின் நற்செய்தியைக் கேட்க அங்கலாய்க்கின்றனவே!... இந்நற்செய்தி அவர்களைக் கிட்டிச்சேர உதவும்படி நீங்கள் என்னதான் செய்யப்போகின்றீர்கள்?... நீங்கள் கிறிஸ்துவை விசுவசிப்பவர்களானல் இறைவன் மானிடருக்காகக் கொடுக்கும்படி கொண்டுவந்த நற்செய்தி உலகில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது, இப்பொறுப்பைச் செய்துமுடிப்பதற்கு மறைபரப்புதற் சபையின் ஒரு காகாமாக நின்றுதவுங்கள்.

இன்றே எமக்கு எழுதி இச்சபையின் ஓர் அங்கத்தினராகுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மார்கழி — 1969

| | | | |
|---|---|---|---|
| 14 | ஞாயிறு | வருகைக்கால 3-ம் ஞாயிறு | [ஊ] |
| 15 | திங்கள் | கிழமைப் பூசை | [ஊ] |
| 16 | செவ்வாய் | புனித எயிஸ்பியஸ் | [சி] |
| 17 | புதன் | நோன்புப் புதன் | [ஊ] |
| 18 | வியாழன் | கிழமைப் பூசை | [ஊ] |
| 19 | வெள்ளி | நோன்பு வெள்ளி | [ஊ] |
| 20 | சனி | நோன்புச் சனி | [ஊ] |

சத்தியவேத பாதுகாவலன்

# தக்க ஆயத்தம்

இன்னும் சில நாட்களில் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் ஆவலோடெதிர்பார்த்திருக்கும் கிறிஸ்மஸ் விழா வந்துவிடும். விழாவை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு ஒவ்வொருவரும் ஆயத்தங்கள் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் வெளி ஆடம்பரங்களில் கருத்தைச்செலவிட்டிருக்கும் பல மக்கள் அதன் உண்மையான கருத்தை உணராதுவிடுகின்றனர். அனேகருக்கு நத்தார் வெறும் உண்டாட்டுக் களியாட்டுக்குரிய ஒரு விழாவாகவே தோன்றுகிறது. அவர்கள் மகிழ்ந்தாலும் மகிழ்ச்சிக்குரிய காரணத்தை மறந்துவிட்டனர். கிறிஸ்மஸிலிருந்து கிறிஸ்துநாதரைப் பிரித்துவிட்டால் அது அர்த்தமற்றுப்போய்விடும். எனவே கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் அனைத்திற்கும் கிறிஸ்துவே மையமாக விளங்கினுலொழிய அது ஒரு போலி விழாவாகவே இருக்கும். கிறிஸ்மஸ் பெருநாளில் நாம் மகிழ்வதற்குக் காரணமுண்டு. உரிமையுமுண்டு. ஏனெனில் கிறிஸ்துவின் மனித அவதாரத்திலுலேயே நாம் மீட்கப்பட்டோம். அந்த மீட்பு எந்தப் பெறுபேறுகளை எங்களுக்கு அருளியதோ அவற்றைப் பூரணமாக எம் வாழ்வில் இடம்பெறச் செய்வதே நத்தார் விழாவைக் கொண்டாடச் சிறந்த வழியாகும். அதாவது கிறிஸ்துவை எம் ஆத்துமத்தில் வரவேற்கத் தக்கதான ஆன்ம ஆயத்தம் செய்வதாகும். நல்லபாவசங்கீர்த்தனம் செய்து, நன்மை பெற்று இறைவனுடனும், பிறருடனும், தம்முடனும் சமாதானத்துடனிருப்பது இத் திருநாளைத் தக்கவிதமாகக் கொண்டாடுவதற்கு அத்தியாவசியமானதொன்ருகும்.

நத்தார்த் திருநாளின் மற்ரெரு பண்பு கொடுத்தல். நண்பர்களுக்கும் உறவினருக்கும் பரிசுகளை அளித்து மகிழ்கிறோம். கிறிஸ்துநாதருக்கும் நாம் ஒரு பரிசை அளிக்க வேண்டாமா? கிறிஸ்துநாதரை மனித உருவிற் கண்டு பரிசளிக்க எம்மால் முடியாது. ஆனால் இன்று நம் மத்தியில் நடமாடும் கிறிஸ்துக்கள் பலர் இருக்கின்றனர்; உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி அல்லற்படும் ஏழைமக்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள் அனைத்தும் கிறிஸ்துவுக்கே கொடுக்கப்பட்டனவாகும். இதைக் கிறிஸ்துநாதர் தாமே திருவாய்மலர்ந்து கூறியுள்ளார். ஆகவே புனித கத்தார்த் தினத்தில் எமது ஆடம்பரச் செலவுகளில் சிலவற்றையேனும் ஒறுத்து அதை ஏழைகளுக்குக் கொடுத்து உதவ மறக்கலாகாது. ஆயினும் அத்தகைய உதவிகளைச் செய்ய நேர்ந்தபொழுது நாய்களுக்குக் கொடுப்பதுபோல, மிஞ்சியதையும் தேவையற்றதையும் கொடுத்தால் அது உண்மையான கொடையாகாது. எம் சகோதரர்களுக்கே உண்மையில் கிறிஸ்துநாதருக்கே கொடுக்கிறோம் என உணர்ந்து அன்புடன், மதிப்புடன் அதைச் செய்வதே உத்தமமானது. அப்போதுதான் கிறிஸ்துவின் பிறப்பு மாந்தருக்குக் கொண்டுவந்த சமாதானம், சகோதரத்துவம், சந்தோஷம் இன்று மக்கள்மத்தியில் இடம்பெறமுடியும்.

---

தீமை செய்தான் என்று பழிவாங்க விரும்புகிருயா? அதிக வீரமாய்ப் பழிவாங்கும் முறையைக் கூறுகிறேன்கேள் : அலட்சியம் செய்துவிடு, இதுதான் பழிவாங்குவதன் ஆரம்பம். மன்னித்துவிடு, அதுதான் பழிவாங்குவதன் முடிவு.

—குவார்ல்ஸ்

*　　*　　*

கல்லூரியில் முதற் பாடமாக நான் அறிந்துகொண்டது பொறுமை என்கிற பெரும் பாடம்தான்.

—ஹெலன் கெல்லர்

---

# "வேதப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்கல்ல நிறைவேற்றவே வந்தேன்"

( பரி. மத். 5-ம் அதி. 17-ம் வசனம் )

நம் அன்பின் இரட்சகர் தமது மலைப் பிரசங்கத்தில் வசனித்த திருவுரைகளின் ஒரு பகுதி இவ்வாக்கியம். வேதப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் கடைப்பிடித்து, அந் நம்பிக்கையில் சீவித்துவந்த யூதருக்கு, கிறீஸ்துநாதரின் போதனை வேறுபாடாய்க் காணப்பட்டது, அவர்களின் உள்ளங்களை அறிந்த நம் மீட்பர் "வேதப் பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தேன்,' என்ருர். ஆம், நிறைவேற்றினர்.

பழையேற்பாட்டுக் காலத்தில் இறைவன் எவற்றை நம் பிதாப்பிதாக்கள் தீர்க்கதரிசிகள் மூலம் அறியவைத்தாரோ, அவையெல்லாம் நம் புதியேற்பாட்டுக் காலத்தில் நிறைவேறியிருப்பதை அறிவோம். புதியேற்பாட்டுக் காலத்தில் இறைமகன் கிறிஸ்துவாலும் அப்போஸ்தலராலும் எவை அறிவிக்கப்பட்டதோ, எவை நிறைவேற்றப்பட்டதோ, அவற்றையெல்லாம் நம் திருச்சபை அனுசரித்துவருகிறதை நாம்காண்கிறோம். இவ்வாறு தொடர்ச்சியாக இறைவனுல் நடாத்தப்படும் பரிசுத்த குடும்பமாக நம் திருச்சபை இருக்காவிட்டால், விண்ணரசின் தயாரிப்பை, அதுசீரிய வழியில் நடத்தமுடியாது.

இன்று 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் திருத்தம், விண்ணரசுக்குப் பயணம் செய்துகொண்டிருக்கும் இவ்வுலக ஆன்மாக்களைச் சீர்திருத்தப் பாதையில், அறிவுக்கும் பரிசுத்த தனத்துக்கும் உரிய வெளிச்சமுள்ள பாதையில் தன் தெய்வீக அதிகாரத்தைப் பாவித்து நடத்திக் கொண்டிருக்கிறது. இச் சீர் திருத்தத்தைத் திருச்சபையின் மலர்ச்சி என்றும், புரட்சியென்றும் தத்தம் அறிவுக்குத்தகக் கூறிக்கொள்கின்றனர். திருச்சபையின் ஆராதனையில், பலியில் செப ஒழுங்கில் மாற்றம் ஏற்படுவதேன் என்று ஏங்குவாரும் உண்டு. இறைவனது சித்தப்படி, அவரது ஏற்பாட்டின்படி தூய ஆவியானவரே திருச்சபையை நடப்பித்து, புதுப்பித்து, திருத்தியமைத்து வளர்ச்சியடைவிக்கிருர். எவ்வாறெனில் நாம் வேதாகமத்தை முதல் தொடங்கி கடைசிவரை புரட்டினுல், இறை வழிபாடு, இறைவாக்கி விருந்து ஆரம்பமாகிப் படிப்படியாகத் திருத்தமடைந்து, இரட்சணிய பாதையில் இன்று மலர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்கலாம். பழையேற்பாட்டில், இறைவனுல் அளிக்கப்பட்ட பத்துக் கற்பனையை நம் மீட்பர் கிறிஸ்து,எவ்வளவு திருந்திய வழியில் சுருக்கமாக, "இறைவனை முதல் நேசி" பின் "உன்னைப்போல் பிறனை நேசி" என்று இரண்டு கற்பனையில் அடக்கிவிட்டார். தொடர்ந்து இரண்டு கற்பனையையும் இன்னும் சுருக்கி, "இச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்று வேதப்பிரமாணம் தீர்க்கதரிசனம் முழுவதையுமே ஒரு கற்பனையாக்கி ஒரு குறித்த இலக்கைச் சுட்டிக்காட்டினுர்.

இவ்வாறே இன்று நம் திருச்சபையும் மிக விரிவாக இருந்த வேத அனுசரணைகளை ஆராதனைமுறைகளை பலி நிறைவேற்றத்தை இலகுவான முறையில் தெளிவாக திருத்தி யமைத்திருக்கிறது. இறைவாக்கினதும் கல்வாரிப் பலியினதும் ஒன்றிப்பின் தொடர்ச்சியே, வேதாகம வாசிப்பும், பீடப்பலியும் என்பதை விளக்கி, நம்மை இரட்சணியப்பாதையில் இட்டுச் செல்கிறது. "என்னைப் பின் செல்லுங்கள்" என்றஇறைமகன் கிறிஸ்துவின் வாக்குக்குச் செவிகொடுத்தஆயர்,குருமார் தம்மை இறைபணிக்கென்று அர்ப்பணித்து, கிறீஸ்து தொடங்கிவிட்ட மீட்புப் பலியை, விசுவாசிகளுடன் சேர்ந்து, பீடத்தில் ஒப்புக் கொடுக்கின்றனர். இப் பலியில் கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கையிட்டு, அவரின் உயிர்ப்பை நினைவு கூர்ந்து, அவரின் வருகைக்கு யாவரும் தயாரிக்கப்படுகிருர்கள். பலிப்பொருளாகிய நற்கருணையை உட்கொண்டு அவருடன் ஒன்றித்து அவரின் அருட் கொடைகளாகிய ஐசுவரியங்களுக்குப் பாத்திரர் ஆகின்றனர். ஆயர், குருமார் இவ் ஐசுவரியங்களைப் பகிர்ந்தளிக்கும் பேற்றைப்பெறும் கிறீஸ்துவின் பிரதிநிதிகள் ஆகின்றனர். இறை வாக்குகள் அடங்கிய வேதாகம வாசிப்பும், கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்ப்பையும் நினைவூட்டும் பீடப்பலியுமே திருச்சபையை இயங்கவைக்கும் உயிர்நாடி; இரட்சிப்பின் ஜீவ ஜலம்; சுராந்துவழியும் கற்பாறை.

—நாதன்

---

## அறிவித்தல்

### யாழ்ப்பாண மேற்றிராசன சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசன சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 1969-ம் ஆண்டு மார்கழிமாதம் 23-ந் தேதி செவ்வாய்க்கிழமை (போயாதினம்) நடைபெறும். காரிய திட்டம் பின்வருமாறு :

காலை 9-15 : யாழ்ப்பாண ஆசனக்கோவிலில் மேற்றிராணியாரின் திவ்விய பூசை.

காலை 10-00 : சம்பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் கட்டிடத்தில் வருடாந்த பொதுக்கூட்டம்.

**பொதுக்கூட்ட நிகழ்ச்சிநிரல்**

1. கடந்த வருடாந்த பொதுக்கூட்டக் குறிப்புகள்.
2. வருடாந்த அறிக்கை.
3. மேற்றிராணியாரின் உரை,
4. சங்க உத்தியோகஸ்தர் உட்பட நிர்வாக சபையைத் தெரிவுசெய்தல்.
5. வண. என். எம். சவரிமுத்து சுவாமியார் கருத்துரை,
6. ஐந்து நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறேதேனும் கருமங்கள்.

பொதுக்கூட்டம் முடிந்தவுடன் புதிய நிர்வாகசபை கூடும்,

அங்கத்தினர் அனைவரும் சமுகமளிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர்.

எஸ். எம். ஜே. லூயிஸ்,
செயலாளர்;

தபால்பெட்டி 2,
யாழ்ப்பாணம்;

---

## உலக இருளில் ஓர் ஒளி

சென்ற வாரம் கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து உலகமக்கள் சமாதானத்தைப் பொறுத்த வரையில் சற்றுஆறுதல் அடையக் கூடியதாக இருக்கின்றது. கிலேசத்தைச் சற்று அகற்றும் செய்திகள் இவையே :

● மேற்கு நாட்டுவல்லரசுகள் கிழக்கு ஐரோப்பிய கொமியூனிஸ்த நாடுகளுடன் பல கருமங்களையிட்டும் சமரசமனப்பான்மையுடன் நடந்துகொள்ள செய்திருக்கும்முடிவு.

● வார்சோ ஒப்பந்தநாடுகளான 6கொமியூனிஸ்த நாடுகள் மேற்கு ஜேர்மனியின் புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க தெரிவித்திருக்கும் சம்மதம்.

● பல மாதங்களுக்குமுன் கைவிடப்பட்ட அமெரிக்க—கொமியூனிஸ்த சீனுவின் பேச்சுவார்த்தைகளை மீளவும்தொடக்கி நடத்த இருக்கும் யோசனை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ மார்கழிமீ 13ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org